


கொள்கைகள் ரெடி. பாதை ரெடி. போரிட ஆள்கள் ரெடி. பணம்? செலவுகளுக்கு என்ன செய்வது?

ஒரு போராளிக்குப் பயிற்சி கொடுப்பதென்பது சாதாரண விஷயமல்ல. எடுத்த எடுப்பில் ஏகே 47ஐத் தோளில் மாட்டிவிட்டு, 'போய் வடை சுட்டுவிட்டு வா' என்று சொல்ல முடியாது. பனிக்காட்டில் ஒவ்வொரு போராளியும் தங்கிப் பயிற்சி பெறும் காலம் முழுவதும் அவர்கள் காலை எழுந்து பல் தேய்க்க கோல்கேட் அல்லது கோபால் பல்பொடி வாங்கி வைப்பது தொடங்கி, இரவு படுத்ததும் போர்த்திக் கொள்ளப் போர்வை வாங்கி வைப்பது வரை ஒவ்வொரு அங்குலமும் செலவு பிடிக்கிற விஷயம்.

தவிரவும் வேண்டிய ஆயுதங்கள், வெடி பொருள்கள், சீருடைகள் வாங்க ஆகும் செலவு, போக்குவரத்து, தகவல் தொடர்பு என்று எங்கு தொட்டாலும் செலவு. இருளில் செய்கிற காரியம் என்பதால், எப்போதும் இரட்டைச் செலவு.

அல் காயிதா, லஷ்கர் போன்ற சில இயக்கங்கள் போராளிகளின் குடும்பத்துக்குப் பணம் அனுப்பும் பணியையும் மேற்கொள்கின்றன. அது ஒரு நம்பிக்கை. போராளியாக இருப்பதும் ஒரு உத்தியோகம்தான் என்கிற எண்ணத்தை ஏற்படுத்தும் செயல். குடும்பத்தினரிடமிருந்து 'கல்யாணம் பண்ணிக்கோ, தங்கச்சிக்கு வளைகாப்பு' போன்ற தொந்தரவுகள் ஏதும் வராமலிருக்க ஓரளவு உதவும்.

இதெல்லாம் கூடப் பிரமாதமில்லை. வாங்கிக் குவிக்கிற ஆயுதங்கள் தரமானவையாக இருப்பது அனைத்திலும் பெரிய விஷயம். கள்ள மார்க்கெட்டில் வாங்கினாலும் நல்ல சரக்காக வாங்குவதென்றால், செலவு மிக அதிகம். வாங்குவதற்கு ஆகும் செலவைக் காட்டிலும் அதை எல்லைகள் கடந்து பத்திரமாக எடுத்து வந்து சேர்ப்பது மாபெரும் செலவுத் திருவிழா.

கோடி கோடியாகக் கொட்டினால்தான் கட்டுபடியாகும்.

யாராவது கொடுத்தால்தான் உண்டு. யார் கொடுப்பார்கள்? பாகிஸ்தான். அல்லது காஷ்மீர். லஷ்கர் இ தொய்பா இதில் தெளிவாக இருந்தது. இப்போதைக்கு இவர்களை விட்டால் வேறு நாதியில்லை. இந்த இருவரால் மட்டுமே உதவ முடியும். இந்த இருவர்தான் உதவவும் வேண்டும். அவர்களுக்காகத்தான் இத்தனை கஷ்டங்களும்.

வேலையை ஆரம்பித்தார்கள்.

முதலில், உண்டியல். பூட்டுப் போட்ட சிறிய, பெரிய பெட்டிகள் தயார் செய்யப்பட்டன. பாகிஸ்தானிலுள்ள அத்தனை முக்கிய மசூதிகளின் வாசலிலும் தலா ஒரு பெட்டி வைக்கப்பட்டது.

'அன்புடையீர், லஷ்கர் இ தொய்பா இயக்க வளர்ச்சிக்கு தாராளமாகப் பண உதவி அளித்து உதவிடுவீர்!' என்றெல்லாம் எழுதி ஒட்ட மாட்டார்கள். வெறுமனே ஒரு பெட்டி. அவ்வளவுதான்.

விஷயம் தெரிந்தவர்களுக்கு அந்தப் பெட்டி எதற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று யாரும் சொல்ல வேண்டாம். தொழுகை முடித்துத் திரும்பும்போது, ஆத்மசுத்தியுடன் குனிந்து, போட வேண்டியதைப் போட்டு விட்டு, வீடு போய்ச் சேர்வார்கள். விஷயம் தெரியாதவர்கள் என்றால், கூப்பிட்டு ரகசியமாகத் தெரியப்படுத்த ஒரு மார்க்கெட்டிங் ஆபீஸர் தேவை. பெரிய கேன்வாஸிங் வேண்டியிருக்காது. பாகிஸ்தானியர்கள் இதற்கெல்லாம் மேலதிகம் பழக்கப்பட்டவர்கள்தான். ஆனாலும் துரும்பைக் கிள்ளிப் போட ஒரு எறும்பாவது அவசியம் தேவைதான் அல்லவா?

மசூதிகளுக்கு அடுத்தபடியாகக் கடைகள். இன்னது என்றில்லை. ஜவுளிக்கடை, பலகாரக்கடை, ஹார்டுவேர் கடை, இளநீர் கடை என்று ஒன்று பாக்கியில்லாமல், அத்தனை கடைகளிலும் பெட்டிகள் வந்து இறங்கும். நேராக வருவார்கள். கடைக்காரரைப் பார்த்துச் சிரிப்பார்கள். அல்லது கண்ணசைப்பார்கள். அல்லது ஏதாவதொரு சமிக்ஞை. சத்தம் போடாமல் வாசற்படியில் பெட்டியைக் கட்டி வைத்துவிட்டு, கிளம்பி விடுவார்கள். வாரத்துக்கு ஒரு முறை அல்லது மூன்று நாள்களுக்கு ஒரு முறை வந்து பெட்டியைக் கவிழ்த்துப் பணத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் மாட்டிவிட்டுக் கிளம்பி விடுவார்கள்.

இது ஒரு வழி. இன்னொன்று பொது மக்களைக் கூட்டி வைத்துப் பேசுவது. குறிப்பிட்ட பகுதியில் லஷ்கர் இ தொய்பா நபர்கள் கூடுவார்கள். ரகசிய பிட் நோட்டீஸ்களை முன்னரே விநியோகித்திருப்பார்கள். அல்லது சிறிய போஸ்டர்கள். வேண்டிய மட்டும் மக்கள் கூடியவுடன், இயக்கத்தின் ஸ்டார் பேச்சாளர்கள் மைக்கைப் பிடிப்பார்கள். இடையில் ஒரு சொட்டு கோலி சோடா கூட குடிக்காமல், கடகடவென்று பேசுவார்கள். உணர்ச்சி பொங்கப் பேசுவார்கள். உருக்கமாகப் பேசுவார்கள். அழுதுகொண்டே பேசுவார்கள். பேசிக்கொண்டே அழுவார்கள்.

'நம் இஸ்லாமிய சகோதரர்கள் உலகெங்கும் எப்படியெல்லாம் அவதிப்படுகிறார்கள் தெரியுமா? எங்கெல்லாம் கஷ்டப்படுகிறார்கள் தெரியுமா? கஞ்சி கூடக் குடிக்காமல் எத்தனை பேர் கொலைப் பட்டினியாகக் கிடக்கிறார்கள் தெரியுமா? நம்மை விட்டால் அவர்களுக்கு யார் இருக்கிறார்கள்? நம்மை விட்டால் வேறு ஏது போக்கிடம்? நாம் அனைவரும் சகோதரர்கள் அல்லவா? அவர்களுக்கு உதவுவது நம் கடமையல்லவா?'

'ஆமாம் ஆமாம்' என்று மக்கள் குரல் கொடுக்கும்போதே, உண்டியலைக் குலுக்கிக்கொண்டு ஆட்கள் புகுந்துவிடுவார்கள். சில சமயம் உண்டியலுக்குப் பதில் துண்டு அல்லது சால்வை.

பேச்சாளரின் குரல் உச்சஸ்தாயியில் எகிறும்.

'சகோதர, சகோதரிகளே, காஷ்மீரில் நம் இனத்தவர்கள் படு பயங்கரமான பாதிப்புகளைச் சந்தித்து வருகிறார்கள். முஸ்லிம் விரோத நாடான இந்தியா, நம் மதத்தவரை ஓட ஓட விரட்டியடிக்கிறது. வாழவிடாமல் செய்கிறது. உற்றார், உறவினரை இழந்து, வீடு வாசலை இழந்து அநாதைகளாக நடுத்தெருவில் நம் சகோதரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.'

உண்டியல் குலுங்கும். மக்கள் குலுங்கி அழ ஆரம்பிப்பார்கள்.

'அகண்ட இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் மட்டுமே இதற்கு ஒரே தீர்வு. இஸ்லாமிய சமூகத்தினர் அனைவரும் ஒரே குடையின் கீழ் வாழ வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம். சகோதரர்களே, மிகவும் அபாயகரமான போராட்டம் இது. ஆனாலும், தெரிந்தேதான் இறங்கியிருக்கிறோம். எங்கள் உயிர் போனாலும் பரவாயில்லை. எங்களில் எத்தனை பேர் இறந்தாலும் பரவாயில்லை. போராட்டத்தைக் கைவிட மாட்டோம். எத்தனை பெரிய சக்தி திரண்டு வந்தாலும், எங்களை ஒன்றும் செய்து விட முடியாது.

எங்களுக்குத் தேவை உங்கள் ஆதரவு. உங்கள் ஆதரவு மட்டுமே.'

மிகவும் சாதுரியமாகச் சொற் காய்கள் நகர்த்தப்படும். பணம் வேண்டும் என்று கூட நேரடியாகக் கேட்கமாட்டார்கள். கோடிட்டுக் காட்டுவார்கள். அவ்வளவுதான். ஆனால், அந்தக் கோடு மிக அழுத்தமாக இருக்கும். அதுவும் நெஞ்சைத் தவிர வேறெங்கும் அந்தக் கோடு விழாது.

ஏழை மக்களை மீட்க வந்த ரட்சகர்களாக, சிறகு முளைத்த தேவ தூதர்களாக லஷ்கர் இ தொய்பாவை பாகிஸ்தானியர் பார்க்க ஆரம்பித்தது, அந்தக் கணத்தில்தான்.

இந்த வாய்ப்பை மிக நன்றாகப் பயன்படுத்திக்கொண்டது லஷ்கர் இ தொய்பா. பிரசாரத்தை முடுக்கிவிட்டது. ஆயுதம் தூக்க வேண்டிய போராளிகள் அத்தனை பேரும், பகுதி நேர ஊழியமாக உண்டியல் குலுக்க ஆரம்பித்தார்கள். துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, டொனேஷன் புக்கைக் கையில் தூக்கிக்கொண்டார்கள். அதிகம் வசூல் செய்து கொடுப்பவர்களுக்கு ஸ்பெஷல் அங்கீகாரம். ஸ்பெஷல் பாராட்டு.

பாகிஸ்தானில் பகிரங்கமாக நடைபெறும் இந்தப் பண வேட்டை, காஷ்மீரில் ரகசியமாக நடத்தப்படும். லஷ்கர் ஆதரவாளர்கள் ஒவ்வொருவர் வீடுகளுக்கும் நேரடியாக லஷ்கரின் முகவர் சென்று, நன்கொடை வசூலித்துக்கொண்டு வருவார். மசூதிகளில் ரகசிய கேன்வாஸிங் நடைபெறும். வேலையற்ற காஷ்மீரி இளைஞர்களின் ஒத்துழைப்புடன் இது சாத்தியமாகிறது.

பாகிஸ்தான், காஷ்மீருக்கு அடுத்த படியாக பிரிட்டனிலுள்ள இஸ்லாமியர்களிடமிருந்தும் ஏராளமான பணம் வருகிறது, லஷ்கருக்கு. ஏசி கார், அபார்ட்மெண்ட்ஸ், பொமரேனியன் நாய்க் குட்டி என்று சொகுசாக வாழ்ந்துவரும் வசதியான பிரிட்டிஷ் முஸ்லிம்கள், லஷ்கர் இ தொய்பாவின் தொடர் பிரசாரத்தில் கரைந்து, நன்கொடை அளிக்கத் தொடங்கியது, தொண்ணூறுகளின் மிக இறுதி வருடங்களுக்கு அப்புறம்தான்.

அட, நம் இன மக்கள் சோற்றுக்கு வழியில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, தோலைச் சீவி சீவி ஆப்பிள் பழங்களை விழுங்கிக்கொண்டிருக்கிறோமே. இது பாவமில்லையா? நரகத்தில் கூட சேர்க்க மாட்டார்களே. கடவுளே.

எனவே, அவர்கள் ஹவாலா அல்லது வயர் டிரான்ஸ்ஃபர் மூலம் லஷ்கருக்குப் பணம் அனுப்பத் தொடங்கினார்கள். நம்பகமான பிரதிநிதிகள் மூலம் மொத்தமாக வசூலித்துக் கொடுத்தனுப்புவதும் உண்டு. ஒரு மாதச் சம்பளம். அல்லது இரண்டு மாதச் சம்பளம். பண்டிகைக் காலமென்றால் சிறப்பு போனஸ்.

லஷ்கர் இ தொய்பா சற்றும் எதிர்பார்க்காத ரெஸ்பான்ஸ் இது. பணம் கிடைக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால், லட்சக்கணக்கில் கொட்டும் என்று தெரியாது. உற்சாகத்துடன் இயக்கத்தினரை ஒன்று கூட்டினார்கள். 'சகோதரர்களே, நம் இயக்கம் பெரும் சக்தியாக வளர ஆரம்பித்திருக்கிறது. இதுதான் தருணம். இனி ஒரு நிமிடம் கூட யாருக்கும் ஓய்வு கிடையாது. திரைகடல் ஓடுங்கள். திரவியம் கொண்டு வாருங்கள். சீக்கிரம், சீக்கிரம்.'

விவரம் தெரிந்த யாரோ ஒருவரது மூளையில், மின்னல் போல் ஒரு ஐடியா உதித்திருக்க வேண்டும். இந்த நவீன யுகத்தில் எதற்குத் திரைகடல் ஓடவேண்டும்? இருந்த இடத்தில் இருந்து கொண்டே திரவியத்தை வரவழைக்க முடியாதா?

தனது திட்டத்தை ஒரு பேப்பரில் எழுதிக் கொண்டு போய் தலைமை ஆட்களிடம் நீட்டினார். ஆரம்பத்தில் அவர்களுக்கு எதுவும் புரியவில்லை. பின்னர் புரிந்தது.

திட்டம் இதுதான். உலகைச் சுற்றிய முருகனுக்கு அல்வா கிடைத்ததும், அம்மையப்பனைச் சுற்றிய

விநாயகனுக்கு ஞானப்பழம் கிடைத்ததும் அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனாலும், அதே உத்தியைத்தான் கையாள முடிவு செய்தார்கள். அதிநவீன யுகத்தில் அம்மையப்பன் என்பது இண்டர்நெட் அல்லவா?

உடனடியாக லஷ்கருக்கென்று ஒரு தொழில்நுட்பப் பிரிவு தொடங்கப்பட்டது. கம்ப்யூட்டர்கள் வாங்கப்பட்டன. மளமளவென்று வெப்சைட் ஒன்று உருவானது. பெயர் ஜமாஅத் உத்தவா (Jama'atudDa'wah). தமிழில் புரிய வேண்டுமென்றால், லஷ்கர் தொய்பாவின் ஒண்ணு விட்ட சித்தப்பா பையன். 1985-ல் லாகூரில் பூஜை போட்டு ஆரம்பித்தார்கள்.

'பாவப்பட்ட இஸ்லாமியர்களுக்காக, இஸ்லாமியர்களின் நலனுக்காக, இஸ்லாமியர்களால் நடத்தப்படும் இணையதளம்.' இப்படி கொட்டை எழுத்தில் ஒரு தலைப்பு வைத்துவிட்டுத் தான், அந்த வெப்சைட்டைத் திறந்து வைத்தார்கள்.

எதற்காக இந்த வெப்சைட்?

பாயிண்ட் நம்பர் 1. பஞ்சத்தில் அடிபடும் மக்களைக் காப்பாற்ற. புயல், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க.

பாயிண்ட் நம்பர் 2. எழுதப் படிக்கத் தெரியாததால்தான் இஸ்லாமியர்களை எல்லாரும் ஏய்த்து வருகிறார்கள். விளைவு? மிகவும் பின்தங்கிய ஒரு சமூகமாக அவர்கள் இன்றளவும் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே, ஏழை இஸ்லாமியக் குழந்தைகள் அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படும். எல்.கே.ஜி முதல் எம்.பி.ஏ., வரை எல்லாமே இலவசம். உணவு, தங்குமிடம் அனைத்தும் இலவசம்.

பாயிண்ட் நம்பர் 3. மருத்துவச் சேவை. ஜலதோஷம், தும்மல் முதல் கான்சர், எய்ட்ஸ் வரை அத்தனை வியாதிகளுக்கும் இலவச மருத்துவச் சேவை. இஸ்லாமிய சமூகம் சீரோடும் சிறப்போடும் நல்ல ஆரோக்கியத்தோடும் வாழவேண்டும் என்பதே எங்கள் அவா.

ஆச்சா? எல்லாம் முடிந்தபின், அந்த வெப்சைட்டின் இறுதியில், ஓர் ஓரத்தில் கொட்டை எழுத்தில் இப்படி ஒரு வாசகம் இருக்கும்.

'எங்களது புனிதமான பணியில் கலந்துகொள்ள உங்களுக்கு ஆர்வமா? எங்களுக்கு உங்களால் உதவ முடியுமா? ஆம் எனில், அருகிலுள்ள கட்டத்துக்குள் உங்கள் கிரெடிட் கார்ட் நம்பரைத் தட்டுங்கள். தட்டி விட்டீர்களா? நல்லது. நீங்கள் அன்பளிக்க விரும்பும் தொகை என்ன? அதை இதோ இங்கே குறிப்பிடுங்கள். குறிப்பிட்டு விட்டீர்களா? மிகவும் நல்லது. ஒரு நிமிடம். எங்களுக்காக ஒரே ஒரு நிமிடம். உங்கள் பெயர், முகவரி, மொபைல் நம்பர் மூன்றையும் இங்கே கொடுத்துவிடுங்கள். முடிந்ததா? மிக்க நன்றி. சென்று வாருங்கள்.'

இந்தப் புதிய ஏற்பாட்டுக்குப் பிறகு, லஷ்கர் இ தொய்பாவின் பொருளாதார வளர்ச்சியை நீண்ட காலத்துக்கு ஒருவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால், சில இருப்பியல் காரணங்களுக்காக அடிக்கடி இந்தத் தளத்தின் முகப்பும் முகவரியும் சிறு சிறு மாறுதல்களுக்கு உட்படும். திடீரென்று லஷ்கர் வாசனையே கூட இல்லாமல் சில காலம் இருக்கும். வேறு பெயரில் புதிய அவதாரம் எடுக்கும்.

என்னவானால் என்ன? நமக்குத்தான் இந்தக் குழப்பமெல்லாம். லஷ்கருக்கு அள்ளிக் கொடுக்க நினைக்கிறவர்களுக்குச் சரியான பெயர், முகவரியெல்லாம் ஞானதிருஷ்டியில் தெரிந்துவிடும்!